மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை.

வினா எண் 17, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

17–

ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை

***856–திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கிருஷ்ணராயபுரம், மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்) தொழிற்சாலை சரிவர இயங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்சாலை முழுமையாக இயங்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதித் துறையின் 19–2–1997 ஆம் நாளிட்ட அரசாணை எண் 75, அரசின் கொள்முதல்களில் அரசுத் துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட முன்னுரிமையை ரத்து செய்ய வழிவகுத்தது. ஆகையால், டான்செம் நிறுவனத்தின் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்ப் பிரிவு தயாரிக்கும் பொருட்களுக்கு வழங்கு ஆணைகள் தொடர்ந்து கிடைக்கப்பெறாததால் இந்த ஆலையின் இயக்கம் 2000 ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள்/தொழில் பிரிவுகள் குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

2001 ஆகஸ்ட் 27]

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 850 தொழிலாளர்களின் குடும்ப நலனைக் கருதி, இத்தொழிற்சாலை விரைவில் இயங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், அந்த அரசாணை திரும்பப் பெறப்படும் என்று கூறியுள்ளார்கள். அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று உறுப்பினர் அவர்களுக்கு உறுதிமொழி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, தள்ளிவைக்கப் பெறுகிறது.

வினா எண் 19, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்.

19–

சாதிச் சான்றிதழ்

***461–திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

குரும்பன் – குரும்பர் சமுதாய மக்கள், சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள முரண்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

என்னை வளர்த்து ஆளாக்கி அமைச்சரவை வரிசையிலே அமர வைத்திருக்கின்ற இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போட்ட உத்தரவுகளிலே மிக முக்கியமானது, சாதிச் சான்றிதழ் பெறுவதிலே உள்ள முரண்பாட்டை நீக்க வேண்டும் என்பதாகும். அந்த வகையில் குரும்பன் சமுதாய மக்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள முரண்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். குரும்பன் – குரும்பர் என்ற பெயர்கள் தற்போது பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்கள் எதிலும்